உலகத் தமிழ்க் கல்விக்கழகம்

Skillset

உலகத் தமிழ்க் கல்விக்கழகம்:

கலி.ஃபோர்னியா தமிழ்க் கழகம் 1998 ஆம் ஆண்டு பதிமூன்று மாணவர்களுடனும் நான்கு தன்னார்வ ஆசிரியர்களுடனும் தொடங்கப்பட்டு இன்று 3500 தன்னார்வலர்களையும் 18,200 க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டுள்ளது. புலம்பெயர்ந்து வாழும் குழந்தைகளுக்கும், அயல் நாடுகளில் வளரும் குழந்தைகளுக்கும் மற்றும் தமிழ்க் கற்க விரும்பும் அனைவருக்கும் தமிழ் மொழியையும் தமிழ் பண்பாட்டையும் கற்றுத்தர ஆரம்பிக்கப்பட்ட இத்தமிழ்க் கல்விக்கழகம், இப்பொழுது உலகம் முழுவதும் பரவி, உலகத் தமிழ்க் கல்விக்கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு திறம்பட செயல்பட்டு வருகிறது.

எங்களின் முதல் தமிழ்ப் பள்ளி கலி.ஃபோர்னியா மாநிலத்திலுள்ள, கூப்பர்டினோ நகரில் தொடங்கப்பட்டது. இப்போது எட்டுக் கிளைகளையும், 98க்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளையும் கொண்டுள்ளது. அமெரிக்கா தவிர்த்து லண்டன், நியூசிலாந்து, அயர்லாந்து, துபாய் மற்றும் தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளிலும் பள்ளிகளை நிறுவியுள்ளது.

நோக்கம்:

மாணவர்களைத் தமிழில் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களோடு இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களிலும் மேம்படுத்துவதே உலகத் தமிழ்க் கல்விக்கழகத்தின் முதல் நோக்கம். மேலும் மாணவர்களைத் தமிழ்ப் பண்பாடு, மரபு, பழக்க வழக்கங்கள், இலக்கியம், வரலாறு ஆகியவற்றைப் பாராட்டி, ஈடுபாட்டுடன் போற்றி வளர்க்க ஊக்கப்படுத்துவதும் அதன் மற்றொரு தலையாய நோக்கமாகும்.

உலகத் தமிழ்க் கல்விக்கழகம் தமிழ்மொழி கற்றலை மாணவர்களுக்கு ஒரு இனிய அனுபவமாகவும், மகிழ்ச்சி ஊட்டுவதாகவும் அமைக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது. அதுமட்டுமல்லாமல் அவர்கள் கற்பது, மாணவர்களின் அன்றாட வாழ்க்கையோடு தொடர்புள்ளதாகவும்

இருக்க வேண்டும் என்பதிலும் தெளிவாக உள்ளது. மாணவர்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து குழுக்களாக செயல்பட ஊக்குவிக்கிறது.

வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் சீரான முறையில் நிகழ்வதற்கு ஏற்றவாறு பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியர்களுக்கு, மாணவர்களின் கற்றலைத் தூண்டும் வகையில் பாடம் நடத்த ஆசிரியர் பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முறைசாரா மதிப்பீடும் முறைசார்ந்த மதிப்பீடும் கற்றல் கற்பித்தலில் முக்கியமாக கொள்ளப்படுகின்றன.

உலகத் தமிழ்க் கல்விக்கழகம் மாணவர்களுக்குத் தமிழின் மீது சுய ஆர்வத்தை உண்டாக்கும் வகையில் பாடங்களைத் திட்டமிட்டு, உருவாக்க தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாடங்களின் தலைப்புகள் ஒரு மாணவனிடம் இருந்து ஆரம்பித்து அவனைச் சுற்றி நடப்பவைகளை மையமாகக் கொண்டுள்ளன. அவன், அவனது குடும்பம், ஆரோக்கியம், பள்ளி, சமூகம், பாரம்பரியம், பிறந்தநாடு, வாழும்நாடு, உலகம் போன்றவை இதில் அடங்கும்.

தமிழ்மொழி அதிக புழக்கம் இல்லாத ஒரு சூழலில் மாணவர்கள் இருப்பதால் தமிழ் எழுத்துகளைக் கற்பிப்பது மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது. அதிகமாகப் புழக்கத்திலுள்ள கிரந்த எழுத்துகளும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன.

உலகத் தமிழ்க் கல்விக்கழகத்தின் பாடத்திட்டத்தில் தற்காலத் தேவை மற்றும், பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இலக்கணமும், மொழிமரபுகளும் சேர்க்கப்பட்டுள்ளன. நம் மாணவர்களின் பின்புலத்தைக் கருத்தில் கொண்டு செய்யுளும் திருக்குறளும் பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உலகத் தமிழ்க் கல்விக்கழகத்தில் தமிழ் பயின்று இறுதியாண்டை வெற்றிகரமாக முடித்துத் தேறும் மாணவர்கள்:

- தயக்கமின்றி ஒருவரோடு ஒருவர் தமிழில் உரையாடி கருத்துப் பரிமாற்றம் செய்வர்.
- தமிழில் தவறின்றி எழுதுவர்; தமிழை வாசித்துப் புரிந்து கொள்வர்.
- ஆங்கில மொழியிலிருந்து தமிழுக்கும் தமிழ் மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கும் மொழி பெயர்த்துப் புரிந்துகொள்வர்.
- தமிழ் மொழி மற்றும் தமிழ் மொழிக் கல்வியின் பெருமையை அறிவர்.
- தமிழ் மொழியின் வரலாற்றையும் தமிழர் பண்பாட்டையும் அறிவர்.
- தமிழ் மொழியை ஆர்வத்துடன் பிறருக்குக் கற்பிப்பர்.

மழலை 1

குறிக்கோள்

பேசுதல்

எளிய தமிழ்ச் சொற்களை, கதைகள், மழலைப் பாடல்கள் மற்றும் செயல்பாடுகள் மூலம் புரிந்து கொள்ளச் செய்தல். மிக எளிய மற்றும் அடிப்படை வாக்கியங்களைப் பேசுதல். குடும்பம், நிறங்கள், விலங்குகள், கொண்டாட்டங்கள் பற்றிய தமிழ்ச் சொற்களை, சரியான உச்சரிப்புடன் தெரிந்து கொள்ளுதல், பொருள்களை அடையாளம் கண்டு சரியான வார்த்தைகளைக் கூறுதல்.

Understanding simple Tamil words through stories, nursery rhymes, and activities. Speaking simple sentences. Knowing Tamil words about family, colors, animals, and celebrations correctly, identifying objects, and saying the words.

மழலை 2

குறிக்கோள்

பேசுதல்

மாணவர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையில் பறவைகள், விலங்குகள், உடல் உறுப்புகள், பழங்கள், காய்கறிகள், பூக்கள் போன்ற தலைப்புகளில் உள்ள அடிப்படை வார்த்தைகளை அவர்கள் எளிதில் புரிந்து கொள்ளச் செய்தல். மேலும் பல தமிழ்ச் சொற்களை , செயல்பாடுகள், பாடல்கள், மற்றும் கதைகளின் மூலம் அறியச் செய்தல். சரியான உச்சரிப்பு மற்றும் பொருள்களை அடையாளம் கண்டு சரியான வார்த்தைகளைக் கூறுதல்.

Students easily understand basic words like birds, animals, body parts, fruits, vegetables, and flowers in a way that sparks their interest. Furthermore, they learn many more Tamil words through activities, songs, and stories. They speak with correct pronunciation and identify objects by saying the right words.

அடிப்படை நிலை

குறிக்கோள்:

பேசுதல்:

மாணவர்கள், தமிழில் பேசுவதைப் புரிந்து கொள்ளுதல். கேள்விகளுக்கு தமிழில் பதில் கூற முயற்சி செய்தல், தமிழில் கதை கூற முயற்சித்தல். படம் பார்த்துப் அதில் உள்ளவற்றை தமிழில் கூறுதல். விளையாட்டுகள் மூலம் புதிய வார்த்தைகளைக் கற்றல், மின் அட்டைகள் மூலம் பொருட்கள், பண்ணை, வீட்டு, மற்றும் காட்டு விலங்குகள், பறவைகள், உறவினர்கள், உடல் உறுப்புகள், பூக்கள், காய்கறிகள், நிறங்கள், எண்கள் 1-10 போன்றவற்றை அறிதல், எளிமையான பாடல்களைப் பாடுதல், திட்டப்பணிகள் மூலம் சிறு சிறு வாக்கியங்களை பேச்சுத் தமிழில் பேசுதல்.

Students understand spoken Tamil. They attempt to answer questions and narrate stories in Tamil. They describe what they see in pictures in Tamil. Using flashcards, they learn new words through games and recognize items, farm animals, domestic animals, wild animals, birds, relatives, body parts, flowers, vegetables, colors, numbers 1-10, etc.. They sing simple songs and speak short sentences in colloquial Tamil through projects.

எழுதுதல்:

உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள், உயிர்மெய் எழுத்துகளை (அகர வரிசை மற்றும் ஆகார வரிசை) முழுமையாக எழுதுதல். குறில், நெடில் எழுத்துகளை எழுதுதல், அறிமுகப்படுத்தப்பட்ட எழுத்துகளைக் கொண்டு அமையும் தமிழ்ச் சொற்களை சரியாக எழுதுதல்

Completely writing the vowels, consonants, and vowel-consonant combinations (in the 'a series and the 'aa' series). Writing short and long vowels, and correctly writing Tamil words formed with the introduced letters.

<u>படித்தல்</u>:

உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள், உயிர்மெய் எழுத்துகளை (அகர வரிசை மற்றும் ஆகார வரிசை) அடையாளம் கண்டு சரியான உச்சரிப்புடன் வாசித்தல், சொற்களை வாசித்தல், குறில் நெடில் இனம் கண்டு வாசித்தல்.

Identify vowels, consonants, and vowel-consonant combinations (in the ‘a and ‘aa’ series) and read them correctly; read words; and identify and read short and long vowels.

<u>இலக்கணம்</u>:

குறில் / நெடில் , அறிமுகம் வல்லினம், இடையினம், மெல்லினம்.

Short / Long (vowels), Hard consonants, Medium consonants, Soft consonants.

<u>வகுப்பு 1</u>

<u>குறிக்கோள்</u>:

<u>பேசுதல்</u>:

கேள்விகள் மூலம் பேச்சுத் தமிழில் பேசுதல், படம் பார்த்துப் பேசுதல் பாடல்களை பாடுதல், விளையாட்டுகள் மூலம் புதிய சொற்கள் அறிதல், மின் அட்டை கொண்டு தமிழில் பொருள்களின் பெயர் அறிந்துப் பேசுதல். எண்கள் 10-20 -10,20,30...100 - 100, 200, 300....1000, செயல்கள், மாதங்கள், கிழமைகள் அறிந்து பேசுதல், திட்டப்பணிகள்

செய்வதன் மூலம் பேச்சுத் தமிழில் பேசுதல்.

Speaking in colloquial Tamil through questions, speaking by looking at pictures, singing songs, learning new words through games, and learning the names of objects in Tamil using flashcards. Knowing and speaking numbers 10-20, 10, 20, 30...100, 100, 200, 300....1000, actions, months, and days of the week, speaking in colloquial Tamil by doing projects.

எழுதுதல்:

உயிர்மெய் எழுத்துகளின் உருவாக்கம், சொல் எழுதுதல், கொடுக்கப்பட்டுள்ள படங்களுக்கு ஏற்ற சொல்லை எழுதுதல், ஒரு சொல்லின் உயிர், மெய் மற்றும் உயிர்மெய் எழுத்துகளை பிரித்து எழுதுதல், சொல்லப்படும் வார்த்தைககளை எழுதுதல், எழுத்துகளை முறைப்படுத்தி சொல் அமைத்தல்.

The formation of vowel-consonant combinations, writing words, writing the appropriate word for given pictures, separating the vowel, consonant, and vowel-consonant letters in a word, writing spoken words, arranging letters to form words.

படித்தல்:

இகர, ஈகார, உகர மற்றும் ஊகார வரிசை எழுத்துகள் / சொற்களை அறிந்து தெளிவான உச்சரிப்புடன் பொருள் அறிந்து வாசித்தல், சிறிய தொடர்களை (இரண்டு அல்லது மூன்று சொற்கள்) படித்தல்.

Knowing the 'i', ‘ee’, ‘u’, and ‘oo’ series of letters/words, reading them with clear pronunciation and understanding their meaning, and reading short phrases (two or three words).

இலக்கணம்:

அறிமுகம் நான்/நீ/நீங்கள்

Introducing First, second, and third person

வகுப்பு 2

குறிக்கோள்:

பேசுதல்:

படம் பார்த்துப் பேசுதல், பொருள் பார்த்துப் பேசுதல், உடல் உறுப்புகள், வண்ணங்கள், பழங்கள், காய்கறிகள், பூக்கள், கதை கூறுதல், மின் அட்டை கொண்டு தமிழில் பொருள்களின் பெயர் அறிதல்,திட்டப்பணிகள் செய்வதன் மூலம் தமிழில் பேசுதல்.கதை சொல்லுதல். கேள்விக்கு விடை அளித்தல். பாடல்களைப் பாடுதல். 2 முதல் 3 சொற்களை கொண்ட எளிய வாக்கியங்களை பேசுதல். கொடுக்கப்பட்டுள்ள பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் இணைத்து எளிய வாக்கியங்களைச் சொல்லுதல்.
மூவிடப்பெயர்களை பயன்படுத்தி எளிய வாக்கியங்களைப் பேசுதல்.

Speaking by looking at pictures, speaking by looking at objects, speaking about body parts, colors, fruits, vegetables, flowers, telling stories, learning the names of objects in Tamil using flashcards, speaking in Tamil by doing projects, telling stories, answering questions, singing songs, speaking simple sentences consisting of 2 to 3 words, saying simple sentences by connecting the given noun and verb. Speaking simple sentences using personal pronouns.

எழுதுதல்:

தமிழ் எழுத்துகளைச் சரியாக எழுத்துதல்
எழுத்துகளை வைத்து சிறிய வார்த்தைகளை உருவாக்கி எழுதல்.
மாறிக்கிடக்கும் எழுத்துகளைக் கொண்டு வார்த்தைகளை உருவாக்குதல்.

Writing Tamil letters correctly. Creating and writing small words using the letters. Forming words from jumbled letters.

படித்தல்:

தமிழ் எழுத்துகளை அடையாளம் கண்டு சரியான உச்சரிப்புடன் வாசித்தல். வார்த்தைகளின் பொருள் அறிந்து வாசித்தல். சிறிய தொடர்களை (இரண்டு அல்லது மூன்று சொற்கள்) படித்தல்.

Identify Tamil letters and read them with correct pronunciation. Read words and understand their meaning. Read short phrases (two or three words).

இலக்கணம்:

குறில் / நெடில், எதிர்ச்சொல், சரியான பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் இணைத்து ஒரு வாக்கியத்தை உருவாக்குதல்.

Short Vowels and Long Vowels, Opposite, Combining the appropriate nouns and verbs to make a sentence

வகுப்பு 3

குறிக்கோள்:

பேசுதல்:

படம் பார்த்து வெவ்வேறு சூழலை அறிந்துகொண்டு, குறிப்புச் சொற்களின் உதவியுடன் பேச்சுத் தமிழில் பேசுதல், பொருள் அறிந்து பேசுதல், கதை கூறுதல், நாடகம் மூலம் பேச்சுத் தமிழில் பேசுதல், தேவைக்கேற்பக் குரலில் ஏற்ற இறக்கத்துடன் பேசுதல், எளிய வாக்கியங்களை வாசித்து கலந்துரையாடுதல், விளையாட்டுகள் மூலம் எளிமையான வார்த்தைகளைப் புரிந்துக் கொண்டு பேசுதல், திட்டப்பணிகள் செய்வதன் மூலம் வித விதமான தலைப்புகளில் பேச்சுத் தமிழில் பேசுதல்.

Understanding different situations by looking at pictures and speaking in colloquial Tamil with the help of keywords, speaking with understanding, telling stories, speaking in colloquial Tamil through drama, speaking with appropriate voice modulation as needed, reading simple sentences and discussing them, understanding and speaking simple words through games, speaking in colloquial Tamil on various topics by doing projects.

எழுதுதல்:

தமிழ் வார்த்தைகளை சரியாக எழுதுதல். 2 முதல் 3 சொற்களை கொண்ட எளிய வாக்கியங்களை எழுதுதல், படித்த எழுத்துகளையும், சொற்களையும் கொண்டு எளிய வாக்கியங்களை தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும் உருவாக்குதல். ஆசிரியர் சொல்வதைப் புரிந்து, கேட்டுச் சரியான சொல்லை எழுதுதல். அதற்குரிய ஆங்கிலப் பொருளை எழுதுதல். எழுத்துகளை வரிசைப்படுத்தி சொல் உருவாக்குதல். சொற்களை வரிசைப்படுத்தி வாக்கியம் அமைத்தல்.

Writing Tamil words correctly. Writing simple sentences consisting of 2 to 3 words, clearly creating simple sentences with correct letter formation using the letters and

words learned. Understand and listen to the teacher's words, and write the correct word. Writing its corresponding English meaning and forming words by arranging letters in the correct order, and forming sentences by arranging words in the correct order.

படித்தல்:

சொற்கள் மற்றும் வாக்கியங்களின் பொருள் அறிந்து சரியான உச்சரிப்புடன் வாசித்தல், வாக்கியங்களை வாசித்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல், சிறிய பாடல்கள் மற்றும் கதைகளை வாசித்தல், கிரந்த எழுத்துகளை அறிதல், ஆத்திசூடியை பொருள் அறிந்து கூறுதல், பத்தியை வாசித்துக் கருத்தறிதல்.

Reading words and sentences with correct pronunciation and understanding their meaning, reading sentences and translating them into English, reading short songs and stories, knowing Grantha letters, reciting Aathichoodi (a collection of moral aphorisms) and understanding its meaning, reading a paragraph and comprehending its content.

இலக்கணம்:

ஒருமை-பன்மை, காலங்கள், குறில் - நெடில், மூவிடப் பெயரும் வினைமுற்றும், பெயரடை, வினையடை, ஒலி வேறுபாடு, வினா சொற்கள்

Singular-plural, tenses, short-long vowels, personal pronouns, finite verbs, adjectives/adverbs, sound differentiation, interrogative words

வகுப்பு 4

குறிக்கோள்:

பேசுதல்:

பாகமேற்று நடித்தல், தேவைக்கேற்பக் குரல் ஏற்ற இறக்கத்துடன் பேசுதல், சூழலுக்கேற்ப பேச்சுத் தமிழில் பேசுதல் அல்லது எழுத்துத்தமிழில் பேசுதல், படம் பார்த்து வெவ்வேறு சூழலை அறிந்துக்கொண்டு, குறிப்புச் சொற்களின் உதவியுடன் பேச்சுத் தமிழில் பேசுதல், விளையாட்டுகள் மூலம் எளிமையாகப் புரிந்துக் கொண்டு

பேசுதல், திட்டப்பணிகள் செய்வதன் மூலம் வித விதமான தலைப்புகளை ஆராய்ந்துப் பேசுதல்.

Role-playing, speaking with appropriate voice modulation as needed, speaking in colloquial Tamil or formal written Tamil according to the situation, understanding different situations by looking at pictures and talking in colloquial Tamil with the help of keywords, understanding and speaking simply through games, researching and speaking on various topics by doing projects.

<u>எழுதுதல்</u>:

படித்த எழுத்துகளையும், சொற்களையும் கொண்டு 4 முதல் 5 சொற்கள் கொண்ட எளிய வாக்கியங்களை உருவாக்குதல். தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும் எழுதுதல். ஆசிரியர் சொல்வதைப் புரிந்து, கேட்டுச் சரியான சொல்லை எழுதுதல். சொற்களை வரிசைப்படுத்தி வாக்கியம் அமைத்தல். பத்தியைப் படித்து வினாக்களுக்கு சரியான பதிலை எழுதுதல்.

Creating simple sentences consisting of 4 to 5 words using the letters and words learned. Writing clearly and without distorting the letter forms. Understanding and listening to what the teacher says and writing the correct word. Forming sentences by arranging words in the correct order. Reading a paragraph and writing the correct answers to the questions.

<u>படித்தல்</u>:

சொற்களைச் சரியான உச்சரிப்புடன் பொருள் அறிந்து வாசித்தல். சிறு வாக்கியங்களைப் பொருள் அறிந்து ஏற்ற இறக்கத்துடன் வாசித்தல். குறைந்த வாக்கியங்கள் கொண்ட பாடல்கள், கதைகள் வாசித்தல். திருக்குறள் பொருள் அறிந்து கூறுதல், பத்தியை வாசித்துக் கருத்தறிதல்.

Reading words with correct pronunciation and understanding their meaning; reading short sentences with understanding and appropriate intonation; reading songs and stories with a few sentences; reciting the Thirukkural (a classic Tamil text of couplets) and understanding its meaning; reading a paragraph and comprehending its content.

<u>இலக்கணம்</u>:

ர, ற, ன, ண, ல, ள, ழ வேறுபாடுகள், மூவிடப் பெயர்கள், ஒருமை, பன்மை, காலங்கள், குறில் நெடில், எதிர்ச்சொற்கள், வாக்கியங்களை/பத்திகளை நிறைவு செய்தல், சொற்களை வரிசைப்படுத்தி வாக்கியம் அமைத்தல், கேட்டு/படித்து கருத்தறிதல், சொல்வளம், ஆண்பால் பெண்பால், வேற்றுமை உருபுகள்.

Differences between the letters ர (ra), ற (rra), ன (na), ண (nna), ல (la), ள (lla), ழ (zha); personal pronouns; singular, plural; tenses; short and long vowels; antonyms; complete the sentences/paragraphs; arrange words to form sentences; listening/reading comprehension; vocabulary; masculine and feminine gender; case markers.

வகுப்பு 5

குறிக்கோள்:

பேசுதல்:

படம் பார்த்து வெவ்வேறு சூழலை அறிந்துக்கொண்டு, குறிப்புச் சொற்களின் உதவியுடன் பேச்சுத் தமிழில் பேசுதல், விளையாட்டுகள் மூலம் எளிமையாகப் புரிந்துக் கொண்டு பேசுதல், திட்டப்பணிகள் செய்வதன் மூலம் வித விதமான தலைப்புகளை ஆராய்ந்துப் பேசுதல். பாகமேற்று நடித்தல், பல்வேறு சூழல்களில் கருத்துகளை எளிய முறையிலும் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையிலும் கூறுதல், தேவைக்கேற்பக் குரல் ஏற்ற இறக்கத்துடன் பேசுதல், சூழலுக்கேற்ப பேச்சுத் தமிழில் பேசுதல் அல்லது எழுத்துத்தமிழில் பேசுதல். திருக்குறளைப் பொருளுடன் கூறுதல்.

Understanding different situations by looking at pictures and speaking in colloquial Tamil with the help of keywords, understanding and speaking simply through games, researching and speaking on various topics by doing projects. Role-playing, expressing ideas simply and practically in various situations, speaking with appropriate voice modulation as needed, speaking in colloquial Tamil or formal written Tamil according to the situation. Reciting the Thirukkural with its meaning.

எழுதுதல்:

சூழல், தொடர்படங்கள், உதவிச் சொற்கள், சிறு குறிப்புகள் முதலியவற்றைப் பயன்படுத்தித் தம் கருத்துகளை வாக்கியங்களாக எழுதுதல். படித்த எழுத்துகளையும், சொற்களையும் கொண்டு எளிய வாக்கியங்களை உருவாக்குதல். தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும் எழுதுதல், ஆசிரியர் சொல்வதைப் புரிந்து, கேட்டுச் சரியான சொல்லை எழுதுதல். சொற்களை வரிசைப்படுத்தி வாக்கியம் அமைத்தல். எளிய வார்த்தைகளை மொழிபெயர்த்தல். பத்தியைப் படித்து கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் எழுதுதல்.

Writing their thoughts as sentences using context, related pictures, helping words, short notes, etc. Creating simple sentences using the letters and words learned. Writing clearly and without

distorting the letter forms, understanding and listening to what the teacher says and writing the correct word. Forming sentences by arranging words in the correct order. Translating simple words. Reading a paragraph and writing answers to the questions asked.

<u>படித்தல்</u>:
சொற்களைச் சரியான உச்சரிப்புடன் பொருள் அறிந்து வாசித்தல். சிறு வாக்கியங்களைப் பொருள் அறிந்து ஏற்ற இறக்கத்துடன் வாசித்தல். சிறு வாக்கியங்கள் கொண்ட பாடல்கள், கதைகள் வாசித்தல். திருக்குறள் பொருள் அறிந்து கூறுதல். பத்தியை வாசித்துக் கருத்தறிதல். வடமொழி எழுத்துகள் கொண்ட வாக்கியங்களை வாசித்தல்.

Reading words with correct pronunciation and understanding their meaning. Reading short sentences with understanding and appropriate intonation. Reading songs and stories with a few sentences. Reciting the Thirukkural and understanding its meaning. Reading a paragraph and comprehending its content. Reading sentences containing Sanskrit-derived letters (Grantha letters).

<u>இலக்கணம்</u>:

மூவிடப் பெயர்கள், வேற்றுமை உருபுகள், இணைப்புச் சொல் (ஆனால், அதனால்), பெயர்ச்சொல், வினைச்சொல், ஒலி வேறுபாட்டு சொற்கள், காலங்கள், பாலினம், ஒலி வேறுபாடு.

Personal pronouns, case markers, conjunctions (like 'but', 'therefore'), noun, verb, words with sound differences (homophones), tenses, gender, sound differentiation."

<u>வகுப்பு 6</u>

<u>குறிக்கோள்</u>:

<u>பேசுதல்</u>:
படம் பார்த்து வெவ்வேறு சூழலை அறிந்துக்கொண்டு, குறிப்புச் சொற்களின் உதவியுடன் பேச்சுத் தமிழில் பேசுதல், விளையாட்டுகள் மூலம் எளிமையாகப் புரிந்துக் கொண்டு பேசுதல், திட்டப்பணிகள் செய்வதன் மூலம் வித விதமான தலைப்புகளை ஆராய்ந்துப் பேசுதல், பாகமேற்று நடித்தல், பல்வேறு சூழல்களில் கருத்துகளை எளிய முறையிலும் பயன்பாட்டுக்கேற்ற வகையிலும் கூறுதல், தேவைக்கேற்பக் குரல் ஏற்ற இறக்கத்துடன் பேசுதல், சூழலுக்கேற்ப பேச்சுத் தமிழில் பேசுதல் அல்லது எழுத்துத்தமிழில் பேசுதல்.

கதையின் வாயிலாக திருக்குறளைப் பொருளுடன் பேசுதல். வாக்கியங்களை மொழிபெயர்த்தல்.

Understanding different situations by looking at pictures and speaking in colloquial Tamil with the help of keywords, understanding and speaking simply through games, researching and speaking on various topics by doing projects, role-playing, expressing ideas simply and practically in numerous situations, speaking with appropriate voice modulation as needed, speaking in colloquial Tamil or formal written Tamil according to the situation. Explaining the meaning of Thirukural through stories. Translating sentences.

எழுதுதல்:

சூழல், தொடர்படங்கள், உதவிச் சொற்கள், சிறு குறிப்புகள் முதலியவற்றைப் பயன்படுத்தித் தம் கருத்துகளை எழுதுதல். தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும் எழுதுதல். படித்த சொற்களையும், தொடர்களையும் நினைவுகூர்ந்து எழுதுதல்; படித்த எழுத்துகளையும், சொற்களையும் கொண்டு எளிய வாக்கியங்களை உருவாக்குதல். படம், படத்தொடர், சூழல் முதலியவற்றையொட்டிக் கதை அல்லது கட்டுரை எழுதுதல். வாக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தல், ஆசிரியர் சொல்வதைப் புரிந்து, கேட்டுச் சரியான சொல்லை எழுதுதல். சொற்களை வரிசைப்படுத்தி வாக்கியம் அமைத்தல். பத்தியைப் படித்து வினாக்களுக்கு சரியான பதிலை எழுதுதல்.

Writing their thoughts using context, related pictures, helping words, short notes, etc. Write clearly and without distorting the letter forms. Recalling and writing learned words and phrases; creating simple sentences using the letters and words learned. Writing a story or essay based on a picture, a series of images, or a situation. Translating sentences into English, understanding and listening to the teacher's words, writing the correct words and forming sentences by arranging words in the correct order, reading a paragraph, and writing the correct answers to the questions.

படித்தல்:

சொற்களைச் சரியான உச்சரிப்புடன் பொருள் அறிந்து சரளமாக வாசித்தல். வாக்கியங்களைப் பொருள் அறிந்து ஏற்ற இறக்கத்துடன் வாசித்தல். குறைந்த வாக்கியங்கள் கொண்ட பாடல்கள், கதைகள் வாசித்தல். திருக்குறள் பொருள் அறிந்து கூறுதல். பத்தியை வாசித்துக் கருத்தறிதல். ஒரு படத்தைப் பார்த்தோ/ ஒரு நிகழ்வைப் பற்றியோ/ஏதாவது ஒரு தலைப்பைப் பற்றியோ தடங்கல் இல்லாமல்

சரளமாத் தமிழில் பேசுதல்.

Reading words fluently with correct pronunciation and understanding their meaning; reading sentences with understanding and appropriate intonation; reading songs and stories with a few sentences; reciting the Thirukkural and understanding its meaning; reading a paragraph and comprehending its content; speaking fluently in Tamil without hesitation about a picture seen, an event, or any topic.

இலக்கணம்:

வேற்றுமை உருபு, ஆண்பால், பெண்பால், குறில், நெடில், பெயரடை, வினையடை, வினைமுற்று, காலங்கள், ஒருமை தொடர், பன்மை தொடர், மூவிடப் பெயர்கள்.
ஒலி வேறுபாடு, உயர்திணை அஃறிணை, இணைப்புச் சொற்கள் (ஆனால், அதனால், அல்லது, அப்போது, உம், ஏனெனில்), வினைப் பயனிலை, பெயர்ப் பயனிலை, வினாப் பயனிலை, பால், இரு தொடரை ஒரு தொடராக மாற்றுக, ஒரு ஓர், எதிர்ச்சொற்கள்.

Case markers include masculine and feminine genders, short and long vowels, adjectives, adverbs, finite verbs, tenses, singular and plural sentences, and personal pronouns. Sound difference (homophones), noun classes (differences in referring to humans and non-human objects) conjunctions (but, therefore, or, then, also/and, because), verb predicate, noun predicate, interrogative predicate, gender, combine two sentences into one, a/an (in Tamil), antonyms.

வகுப்பு 7

குறிக்கோள்:

பேசுதல்:

விவாதம் செய்தல், கருத்துரைத்தல், கதை கூறுதல், பாகமேற்று நடித்தல், பல்வேறு சூழல்களில் கருத்துக்களை எளிய முறையிலும் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையிலும் கூறுதல். தேவைக்கேற்பக் குரல் ஏற்ற இறக்கத்துடன் பேசுதல், சூழலுக்கேற்ப பேச்சுத் தமிழில் பேசுதல் அல்லது எழுத்துத்தமிழில் பேசுதல். கேட்ப்போரின் கேள்வியைப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்ற பதிலை வாக்கியத்தில் கூறுதல். பொருத்தமான சொற்களையும் பலதரப்பட்ட வாக்கியங்களையும் பயன்படுத்தித்

தெளிவாகக் கருத்துப் பரிமாற்றம் செய்தல். கருத்துப் பரிமாற்றத்தைத் தொடங்கவும், தொடர்ந்து நிகழ்த்தவும், சரியான முறையில் முடிக்கவும் அறிந்திருத்தல். இடம், பொருள், சூழலுக்கேற்பத் தெளிவாகக் கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்த அறிந்திருத்தல். கதையின் வாயிலாக திருக்குறளைப் பொருளுடன் பேசுதல்.

Debating, commenting, storytelling, role-playing, and expressing ideas simply and practically in various situations. Speaking with appropriate voice modulation as needed, speaking in colloquial Tamil or formal written Tamil according to the situation. Understanding the listener's questions and providing suitable answers in sentences. Exchanging ideas using appropriate words and diverse sentences. Knowing how to initiate, continue, and conclude a conversation correctly. Knowing how to exchange ideas according to the place, object, and situation.Explaining the meaning of Thirukural through stories.

எழுதுதல்:

சூழல், தொடர்படங்கள், உதவிச் சொற்கள், சிறு குறிப்புகள் முதலியவற்றைப் பயன்படுத்தித் தம் கருத்துகளின் மூலம் கதை அல்லது கட்டுரை எழுதுதல்.
தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும் எழுதுதல். படித்த சொற்களையும், தொடர்களையும் நினைவுகூர்ந்து எழுதுதல்; படித்த எழுத்துகளையும், சொற்களையும் கொண்டு வாக்கியங்களை உருவாக்குதல். மொழிபெயர்ப்பு, வாக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தல். பத்தியைப் படித்து வினாக்களுக்கு சரியான பதிலை எழுதுதல்.

Writing a story or essay based on their thoughts using context, related pictures, helping words, short notes, etc. Write clearly and without distorting the letter forms. Recalling and writing learned words and phrases; creating sentences using the letters and words learned. Translating sentences into English, reading a paragraph, and writing the correct answers to the questions.

படித்தல்:

சொற்களைச் சரியான உச்சரிப்புடன் பொருள் அறிந்து சரளமாக வாசித்தல். வாக்கியங்களைப் பொருள் அறிந்து ஏற்ற இறக்கத்துடன் வாசித்தல். குறைந்த வாக்கியங்கள் கொண்ட பாடல்கள், கதைகள் வாசித்தல். திருக்குறள் பொருள் அறிந்து கூறுதல். பத்தியை வாசித்துக் கருத்தறிதல். பாடத்தை வாசித்துப் பொருள் உணர்ந்து விவரித்தல். கதைப் புத்தகங்களை ஆழ்ந்து படித்தல்.

Reading words fluently with correct pronunciation and understanding their meaning;

reading sentences with understanding and appropriate intonation; reading songs and stories with a few sentences; reciting the Thirukkural and understanding its meaning; reading a paragraph and comprehending its content; reading a lesson, understanding its meaning, and explaining it; reading storybooks in depth.

இலக்கணம்:

வேற்றுமை உருபு, பெயர்ச்சொல், பெயரெச்சம், வினைச்சொல், வினையெச்சம், வினைமுற்று, மூவிடப் பெயர்கள், திணை, பால், இணைச்சொற்கள், எழுவாய், செயப்படுபொருள், பயனிலை, வினா எழுத்துகள், காலங்கள்

Case markers, noun, relative participle (adjectival participle), verb, verbal participle (adverbial participle), finite verb, personal pronouns, noun classes (difference in referring to humans and non-human objects) gender (masculine/feminine/neuter), correlative conjunctions, subject, object, predicate, interrogative words, tenses.

வகுப்பு 8

குறிக்கோள்:

பேசுதல்:

விவாதம் செய்தல், கருத்துரைத்தல், கதை கூறுதல், பாகமேற்று நடித்தல். பல்வேறு சூழல்களில் கருத்துகளை எளிய முறையிலும் பயன்பாட்டுக்கேற்ற வகையிலும் கூறுதல். தேவைக்கேற்பக் குரல் ஏற்ற இறக்கத்துடன் பேசுதல், சூழலுக்கேற்ப பேச்சுத் தமிழ் அல்லது எழுத்துத்தமிழில் பேசுதல். கேட்போரின் கேள்வியைப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்ற பதிலை வாக்கியத்தில் கூறுதல். பொருத்தமான சொற்களையும் பலதரப்பட்ட வாக்கியங்களையும் பயன்படுத்தித் தெளிவாகக் கருத்துப் பரிமாற்றம் செய்தல். கருத்துப் பரிமாற்றத்தைத் தொடங்கவும், தொடர்ந்து நிகழ்த்தவும், சரியான முறையில் முடிக்கவும் அறிந்திருத்தல். இடம், பொருள், சூழலுக்கேற்பத் தெளிவாகக் கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்த அறிந்திருத்தல். கருத்துகளை மேலும் விளக்க அறிந்திருத்தல். திருக்குறள், மூதுரை பொருள் விளக்கிக் கூறுதல்.

Debating, commenting, storytelling, and role-playing. Expressing ideas simply and practically in various situations. Speaking with appropriate voice modulation as needed, speaking in colloquial Tamil or formal written Tamil according to the situation. Understanding the listener's questions and providing suitable answers in sentences. Exchanging ideas using appropriate words and diverse sentences. Knowing how to

initiate, continue, and conclude a conversation correctly. Knowing how to exchange ideas according to the place, object, and situation. Knowing how to explain ideas further. Explaining the meaning of Thirukkural and Moothurai (an ancient Tamil collection of wisdom).

எழுதுதல்:

சூழல், தொடர்படங்கள், உதவிச் சொற்கள், சிறு குறிப்புகள் முதலியவற்றைப் பயன்படுத்தித் தம் கருத்துகளை நிரல்பட கட்டுரை எழுதுதல். தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும் எழுதுதல். படித்த சொற்களையும், தொடர்களையும் நினைவுகூர்ந்து எழுதுதல்; படித்த சொற்களைக் கொண்டு எளிய தொடர் வாக்கியங்களை உருவாக்குதல். படம், படத்தொடர், சூழல் முதலியவற்றையொட்டிக் கதை அல்லது கட்டுரை எழுதுதல்.மொழிபெயர்த்தல். உயர்நிலை சொல்வளம்.

Write their thoughts in a coherent essay of at least ten sentences using context, related pictures, helping words, short notes, etc. Write clearly and without distorting the letter forms. Recalling and writing learned words and phrases; creating simple compound sentences using learned words and writing a story or essay based on a picture, a series of images, or a situation. Translating. Advanced vocabulary.

படித்தல்:

சிறிய நூல்களை பொருள் உணர்ந்து சரளமாக வாசித்தல். பலவிதமான நூல்களை ஆழ்ந்து படித்தல். படங்கள், வரைபடங்கள், அட்டவணைகள், போன்ற பலதரப்பட்ட நூல்களை படித்து அவற்றில் உள்ள நேரடிப் பொருளை புரிந்து கொண்டு ஒருங்கிணைத்தல்.

Reading small books fluently with understanding. Reading various types of books in depth. Reading diverse books such as those containing pictures, maps, tables, etc., and understanding and synthesizing the direct information within them.

இலக்கணம்:

வேற்றுமை உருபு, சொல்லுருபுகள், பெயரெச்சம், வினையெச்சம். இரட்டைக்கிளவி,எழுத்துகளை இணைத்து சொல் உருவாக்குதல் (முதல், இடை, கடை),
அடுக்குத்தொடர், குறில், நெடில், வேறுபாடு உணர்த்தும் தொடர்கள், பெயரெச்சம், பெயர், பெயரடை, வினையடை, ல, ள, ழ, ண ன ந, ற, ர ஒலிகள் கொண்ட தொடர்கள், தொடரை நீட்டித்து எழுதுதல், வினைமுற்று, வினையெச்சம், ஒருமை, பன்மை பிழையில்லாத தொடரைக் கண்டறிதல், சொற்களை மொழிபெயர்த்து வாக்கியம் அமைத்தல், இணைத்து எழுது, வரிசைமாறியுள்ள தொடர்களை

வரிசைபடுத்துதல், உரையாடலை மொழிபெயர்த்தல், எழுவாய், செயப்படுபொருள், பயனிலைஅடைமொழியுடன், திணை, பால், எண், இடம், காலம்.

Case markers, postpositions; relative participle (adjectival participle); verbal participle (adverbial participle).

Reduplicative words: forming words by combining letters (initial, medial, final);

Intensive reduplication; short and long vowels; sentences that convey difference; relative participle; noun; adjective; adverb; sentences containing the sounds of ல (la), ள (lla), ழ (zha), ண (nna), ன (na), ந (na), ற (rra), ர (ra); extending sentences; finite verb; verbal participle; identifying error-free singular and plural sentences; translating words and forming sentences; case markers; combine and write; ordering jumbled sentences; translating dialogues; subject, object, predicate with modifiers; noun classes (difference in referring to humans and non-human objects), gender (masculine/feminine/neuter), number, person, tense agreement.